**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2018**

**--------------------------------------------------------------------------------------------------------------**

**1. அபிப்பிராயம்**

----------------------------

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்று உள்ளடங்கலாக, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

--------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- நிறுவகம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- நிறுவகத்தின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2009 ஆம் ஆண்டிலிருந்து மீதி கீழ்க்கொண்டுவரப்பட்ட, சுகாதார அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 915,750 பாடநெறிக் கட்டணங்கள் மற்றும் 2015 ஆம் ஆண்டு மற்றும் 2016 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,681,625 கட்டிட வாடகையை உள்ளடக்கிய ரூபா 2,597,375 மொத்த தொகையொன்று, மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2009 ஆம் ஆண்டிலிருந்து அவற்றிற்கான ஞாபகமூட்டல்கள் அனுப்பப்படுகின்றன. எவ்வாறாயினும், அவற்றில் குறிப்பிடப்பட்ட பணங்கள் இதுவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்றி பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | நிதிப்பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 இன் 2015/3 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | உபகட்டுநிதிகள் தொடர்புடைய நோக்கம் பூர்த்தியடைந்த பின்னர் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், 17 சந்தர்ப்பங்களில் அளிக்கப்பட்ட ரூபா 800,420 கூட்டுத்தொகையான உப கட்டுநிதிகளின் தீர்ப்பனவுக்காக 28 நாட்கள் தொடக்கம் 231 நாட்கள் வரையான காலப்பகுதியொன்று கடந்திருந்தது. | 2018 பெப்ரவரி இறுதியிலிருந்து ஏப்ரல் வரை கல்விசாரா உத்தியோகத்தர் வேலை நிறுத்தஞ் செய்திருந்தமை குறித்த காலப்பகுதியின் போது உபகட்டுநிதிகளின் தீர்ப்பனவின் தாமதத்திற்கான பிரதான காரணமாகக் காணப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைகளிலுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2004 யூலை 29 இன் பிஈடீ/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டின்போது நிலையான வைப்புக்களில் ரூபா 50 மில்லியன் தொகையொன்று வைப்பிலிடப்பட்டிருந்தது. | திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான கடிதங்களினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் தொழிற்பாடுகளினை தொடர்புடைய முன்னைய ஆண்டிற்கான ரூபா 106,242,686 மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 53,762,287 மிகையொன்றாகக் காணப்பட்டிருந்தமையால், நிதிசார் விளைவில் ரூபா 52,516,399 பற்றாக்குறையொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. ஏனைய வருமானம் ரூபா 44,182,108 இனால் குறைவடைந்தமை மற்றும் பட்டப்பின் பயிற்சிகள் தொடர்பான செலவினம் ரூபா 13,129,711 இனால் அதிகரித்தமையும் மேற்குறித்த பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகளான “MD (2018 Prospectus) மற்றும் “MD Clinical Oncology Prospectus” போன்ற பாடநெறிகளுக்கு பதிவு செய்யப்பட்டிருந்த எவ்வித மாணவர்களும், பரீட்சைகளில் சித்தியடைந்திருக்கவில்லை. | ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்காக குறித்துரைக்கப்பட்ட அளவிடைவிதிகள் காணப்பட்டமையினால், தொடர்புடைய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முடியாது காணப்பட்ட வைத்திய உத்தியோகத்தர்கள், சித்தியடைவதற்கு திறமையற்றவர்களாகக் காணப்படுகின்றனர். மேலும், நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்த வைத்திய உத்தியோகத்தர்கள் அது ஒரு தேசிய தேவைப்பாடாக கருத்திற்கொண்டு தொடர்புடைய வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். எவ்வாறாயினும், அந்தப் பரீட்சைகளில் உண்மையாக சித்தியடையத் தவறிய வைத்திய உத்தியோகத்தர்களினால், பரீட்சைகளினை சித்தியடைவதனூடாக குறித்த தேசிய தேவைப்பாட்டினைப் பூர்த்திசெய்ய முடியாதிருந்ததுடன் குறிப்பிட்ட இந்த நிலைமை பாதகத்தை உண்டுபண்ணும் பிரதான காரணமாக காணப்பட்டது. எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பில் தொடர்புடைய கல்விசார் குழுவின் கவனத்தைச் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | இந்த நிலைமைக்கான காரணங்கள் கண்டறியப்பட வேண்டியதுடன் அவற்றை சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 நிதிகளின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பட்டமளிப்பு விழாவில் தங்கப்பதக்கங்களினை அளிப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நன்கொடை நிதியத்தில் ரூபா 3,755,600 மீதியொன்று காணப்பட்ட போதிலும், தொடர்புடைய நோக்கத்திற்காக குறித்த நிதியைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நன்கொடை நிதியம் பட்டமளிப்பு விழாவிற்கான தங்கப்பதக்கங்களினை கொள்வனவு செய்வதற்காகப் பெறப்பட்ட பணத்தைக் கொண்டிருந்ததுடன் அவற்றின் மீதான வட்டிகள் மாத்திரம் தங்கப்பதக்கங்களின் கொள்வனவுக்காக செலவிடப்படுகின்றது. இந்த அடிப்படைப் பணங்கள் ஏனைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுமாக இருந்தால், பட்டமளிப்பு விழா சார்பில் தங்கப்பதக்கங்களினைக் கொள்வனவு செய்வதற்கான அவற்றின் மீதான வட்டிகள் போதுமற்றதாகக் காணப்படும். | நிதியத்தின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | பெறுகை வழிகாட்டல்களின் 4.2.1(இ) வழிகாட்டலின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டம் விபரமாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்கான பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், விபரமான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காத 2019 ஆம் ஆண்டிலிருந்து விபரமாக பெறுகைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்புக்களுக்கு உட்படுத்தப்பட்ட ரூபா 4,025,773 பெறுமதியுடைய 02 ஒப்பந்தங்கள் தொடர்பில் பெறுகை வழிகாட்டல்களின் 5.4.10(இ) வழிகாட்டலின் பிரகாரம் செயலாற்ற பிணைகள் பெறப்பட்டிருக்கவில்லை. | இந்தக் கட்டளையின் பெறுமதி ரூபா 0.5 மில்லியனை விடக் குறைவாகக் காணப்படுகின்றமையினால், 10% செயலாற்றல் பிணையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | ரூபா 4,439,699 பெறுமதியுடைய 03 ஒப்பந்தங்கள் தொடர்பில் பெறுகை வழிகாட்டல்களின் 8.9.1(அ) வழிகாட்டலின் பிரகாரம் எவ்வித எழுத்துமூலமான உடன்படிக்கைளும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவசரமான சேவை தேவைப்பாடுகள் மீது அமுல்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் எவ்விதமான எழுத்துமூலமான உடன்படிக்கைகளும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்காத போதிலும், எதிர்காலத்தில் அவை | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அனைத்திற்கும் எழுத்துமூலமான உடன்படிக்கைகளினை ஏற்படுத்திக் கொள்வதற்கான அறிவுறுத்தல்களினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன. | |
| (ஈ) | 12 சந்தர்ப்பங்களில் விலைமனுக்களினை அழைத்திராது ரூபா 1,338,498 கூட்டுத்தொகையான விநியோகத்திற்கான ஒப்பந்தங்கள் அளிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 492,979 பெறுமதியுடைய 04 ஒப்பந்தங்கள் அதே ஒப்பந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது. | மேசன், இயந்திர வல்லுநர், தச்சன் மற்றும் நீர் குழாய் பழுதுபார்ப்பவர் போன்றவற்றில் வெற்றிடங்கள் காணப்பட்டமையினால், அங்கு காணப்படும் நீர்க் குழாய்களினை பதிக்கின்ற மற்றும் வசதிகள் செயற்பாடுகளினை அளிக்கின்ற நிறுவகம், நிபுணரொருவர் தாமதமின்றி தெரிவுசெய்யப்பட வேண்டியதுடன் சில வேலைகள் அலுவலக நேரங்களின் பின்னர் செய்யப்படல் வேண்டும். ஆகையினால், விலைமனுக்களினை அழைத்திராது ஒப்பந்தங்களினை அளிக்கவேண்டியுள்ளது. | அவற்றிற்கான விலைமனுக்கள் அழைக்கப்படல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் 12 பதவிகளில் காணப்படும் 27 வெற்றிடங்களினை நிரப்பியிராது முறையே பணிப்பொறுப்பு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 09 மற்றும் 05 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவர்களுக்கு ரூபா 6,103,072 மொத்த தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | வெற்றிடங்களினை நிரப்புவதற்குத் தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதில் தாமதம், அமைச்சரின் பட்டியலினூடாக நிறப்பப்படும் வெற்றிடங்களில் காணப்படும் பதவிகள் தொடர்பான பதிவேடுகளினைப் பெறுவதில் தாமதம் மற்றும் சில பதவிகளுக்காக உள்ளக விளம்பர அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் அழைக்கப்பட்ட போதிலும், அவற்றிற்கான விண்ணப்பதாரிகளின் பற்றாக்குறை மற்றும் அவற்றிற்காக விண்ணப்பித்த விண்ணப்பதார்களுக்காக நடாத்தப்பட்ட பரீட்சைகளின் போது விண்ணப்பதாரர்களினால் பரீட்சைகளில் சித்தியடையத் தவறியமை காரணமாக செய்தித்தாள் விளம்பரங்களினை பிரசுரிப்பதினூடாக விண்ணப்பதாரர்களினை அழைப்பதன் மூலம் தகுதியுடைய விண்ணப்பதார்கள் நியமிக்கப்பட்டமை போன்ற நீண்டகால செயன்முறைகளின் விளைவொன்றாக வெற்றிடங்களினை நிரப்புவதற்காக நீண்டகாலப்பகுதி எடுத்தமை காரணமாக உங்களால் குறிப்பிடப்பட்டவாறு வெற்றிடங்கள் உருவாகின. வெற்றிடங்களினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் வரை வைத்திய உத்தியோகத்தர்களுக்கு தொடர்ச்சியாக சேவையை வழங்குவதற்காக மாத்திரம் ஒப்பந்த அடிப்படையில் எமது நிறுவகத்திற்கு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | விரைவாக வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பு

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிற்கான நோக்கங்களினை அடைந்துகொள்வதற்காக மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் அந்த நோக்கங்களினை அடைந்து கொள்வது தொடர்பான செயல்முன்னேற்றங்களினை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், நிறுவனத்தின் செயலாற்றலினை உள்ளபடியான செயலாற்றலுடன் ஒப்பீடு செய்து பரீட்சிக்க முடியாதிருந்தது. மேலும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 04 முக்கிய தொழிற்பாடுகளை முழுமையாக செயற்படுத்த முடியாதிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பிரதான நோக்கங்களின் ஒட்டுமொத்த நோக்கம் இந்த நாட்டில் சுகாதார தேவைகளினை எதிர்கொள்வதற்கு மருத்துவ மற்றும் பல் மருத்துவ துறைகளில் நிபுணர்களினை உருவாக்குவதற்காகக் காணப்படுகின்றது. இந்த நோக்கங்களினை அடைந்து கொள்ளும் செயலாற்றல் வருடாந்தம் 98 சதவீதமாகக் காணப்படுகின்றதுடன், அது ஒரு தொடர்ச்சியான செயன்முறையாகக் காணப்படுகின்றது. மேலும், ஒவ்வொரு நோக்கங்களுடன் தொடர்புடைய எதிர்பார்க்கப்பட்ட அளவினை சதவீதங்களாக குறித்துக்காட்டுவது கடினமானதாகக் காணப்படுகின்றது. மேலும், அந்த நோக்கங்களினை அடைந்து கொள்வதற்காக கற்பனை ஏற்பாடுகள் தொடர்புடைய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டம் துல்லியமாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 03 பிரதான வருமான மூலகங்களில் மதிப்பீடு மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 18 சதவீதம் தொடக்கம் 24 சதவீதம் வரையான வீச்சில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் 10 செலவின வகைகளில் 60 சதவீதம் தொடக்கம் 2,455 சதவீதம் வரையான வீச்சில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், மதிப்பிடப்பட்டிராத நானாவித வருமானத்தில் ரூபா 31.5 மில்லியன் உள்ளபடியான வருமானமொன்று காணப்பட்டிருந்தமையினால், பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. | தொடர்புடைய ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகளுக்காக பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை பதிவுக் கட்டணங்கள் மற்றும் நடாத்தப்பட இருக்கின்ற பரீட்சைகளின் எண்ணிக்கையின் பிரகாரம் பரீட்சைக் கட்டணங்களின் அடிப்படையில் சார்ந்து காணப்படுகின்றது. மேலும், 2018 ஆம் ஆண்டில் வங்கியால் பெறப்பட்ட வட்டியின் சதவீதத்தில் அதிகரிப்பு, வட்டி வருமானத்தில் அதிகரிப்புக்கு காரணமாகக் காணப்பட்டிருந்தது. | பாதீடனாது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியொன்றாகக் பயன்படுத்தப்படல் வேண்டும். |